எம்.சி.ஓ.பி. எண்: 5924/2019 தேதி : 3.10.2024

ம.சா. : 1

பெயர் : திரு. நாராயணன் (எ) நாராயணசாமி

த/பெ. : திரு. கோவிந்தராஜுலு

வயது : 48

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேலும், என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 7 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் விபத்து சமயத்தில் எனது நண்பர் சுரேஷ்–க்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் அவர் ஓட்டிச்செல்ல நான் பின்னால் அமர்ந்து சென்றேன். விபத்து சமயத்தில் புளியம்பாக்கத்திலிருந்து ஊத்துகாடு செல்லும் பாதையில் வாலாஜாத் வழியாக சென்று கொண்டிருந்தேன். டாரஸ் லாரி வாலாஜாத்திலிருந்து செங்கல்பட்டு நோக்கி சென்று கொண்டிருந்து. விபத்து எதிர்எதிரே வாகனங்கள் மோதி ஏற்பட்டது. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அந்த சாலையில் இரண்டு வாகனங்கள் செல்லலாம் மத்தியில் தடுப்புச்சுவர் இல்லை. எனது வாகனம் விபத்து நடந்த சாலையின் இடது புறத்தில் சென்று கொண்டிருந்தது. விபத்து இருவருக்கும் காயங்கள் ஏற்பட்டது, முதலில் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் இருவரும் சேர்க்கப்பட்டோம். அதன் பிறகு ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோம். காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையின் விபத்து பதிவேட்டு நகல் தாக்கல் செய்யவில்லை. அந்த விபத்து பதிவேட்டு நகலில் சுரேஷ் மது அருந்தி இருந்ததாக காணப்படுவதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய விபத்து பதிவேட்டு நகல் மற்றும் சிகிச்சை ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணங்களை தாக்கல் செய்தால் எங்களுடைய அஜாக்கிரதையால் விபத்து நடந்தது என்பது தெரிய வந்து விடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்து 4 வருடம் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், 5924

காலதாமத்திற்கான காரணத்தை மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து காயத்திற்கு நான் வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை. விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் ஊனமோ, இயலாமையோ இல்லை என்றால் சரியல்ல. தொழில், வருமானம் மற்றும் வருமான இழப்பை காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகைக்கு போதிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது நண்பரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டுள்ள காரணத்தால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.